# TNPSC CCSE – IV தேர்வுக்கான அணுகுமுறை

**இத்தேர்வின் பாடத்திட்டம் பின்வருமாறு**

**I. எழுத்துத்தேர்வு (கொள்குறி வகை) = 300 மதிப்பெண்கள்**

| **பாடம்** | வினாக்கள் | தரம் | **மொத்த மதிப்பெண்கள்** | **கால அளவு** |
|---|---|---|---|---|
| பொது அறிவு | 75 வினாக்கள் | பத்தாம் வகுப்பு தரம் | **300** | 3 மணி நேரம் |
| திறனறி தேர்வு | 25 வினாக்கள் | பத்தாம் வகுப்பு தரம் | | |
| பொது தமிழ் / பொது ஆங்கிலம் | 100 வினாக்கள் | பத்தாம் வகுப்பு தரம் | | |

இத்தேர்வில் பொதுஅறிவுப் பகுதியில் 75 வினாக்களும், திறனறி தேர்வில் 25 வினாக்களும், பொது தமிழ் / பொது ஆங்கிலத்தில் 100 கேள்விகளும், ஆக மொத்தம் 200 கேள்விகள் கேட்கப்படும். ஒரு கேள்விக்கு 1½ மதிப்பெண்கள் வீதம். (200 x 1 ½ = 300 மதிப்பெண்கள்)

இத்தேர்வில் பொது அறிவுக் கேள்விகள் பத்தாம் வகுப்பு தரத்திலும் அட்டவணையில் காணப்படும் எண்ணிக்கையில் கேள்விகள் கேட்கப்படும். பொதுத்தமிழ் அல்லது பொது ஆங்கிலம் பத்தாம் வகுப்பு தரத்தில் கேட்கப்படும்.

**தேர்வுக்குள்ள சிறப்புகள்:**

- மிக எளிமையான வழியில் அரசு துறையில் நுழைவதற்கு இத்தேர்வு வழி வகுக்கிறது.
- பத்தாம் வகுப்பு தேர்ச்சி மட்டுமே இத்தேர்வு எழுதுவதற்கான தகுதியாக இருப்பதால் அனைத்து தரப்பு மாணவர்களும் இதில் பங்கேற்க முடியும்.
- குறைந்தபட்ச பொது அறிவு திறனும், பத்தாம் வகுப்பு கல்வி தரத்தில் கேள்விகளும் இடம்பெறுவதால் பட்டயப்படிப்பு மாணவர்களும் முதுகலை மாணவர்களும் இதில் எளிதாக வெற்றி பெற முடியும்.
- தற்பொழுது உள்ள Counselling முறையின் மூலம் தாங்கள் விரும்பும் ஊரிலேயே பணியாற்ற முடியும் என்பது மற்றொரு சிறப்பு.

- தேர்வை பொருத்தமட்டில் குறைந்தபட்சம் 15 லட்சம் பேர் கலந்துகொள்கிறார்கள் என்பதால் இந்த தேர்வில் கடுமையான போட்டி நிலவும் என்பதில் ஐயமில்லை.

- குறிப்பாக இத்தேர்வில் கேட்கப்படும் கேள்விகள் பெரும்பாலும் (70%) 10ம் வகுப்பு கல்விதரத்தில் இடம்பெறுவதால் பள்ளி பாடபுத்தகங்கள் பெரிதும் உதவும்.

**தேர்விற்கான பாடத்திட்டம் பின்வருமாறு.**

**அலகு – I பொது அறிவியல் (General Science)**

i. இயற்பியல் (Physics)
ii. வேதியியல் (Chemistry)
iii. தாவரவியல் (Botany)
iv. விலங்கியல் (Zoology)

**அலகு II – பொது அறிவு மற்றும் நடப்பு நிகழ்ச்சிகள்: (General Knowledge and Current Affairs)**

**அலகு III – புவியியல் (Geography)**

i. புவியியல் கோட்பாடுகள் (Geographical Theory)
ii. இந்திய புவியியல் (Geographical Theory)
iii. தமிழ்நாட்டு புவியியல் (Geography Tamil Nadu)

**அலகு – IV - இந்திய வரலாறு மற்றும் பண்பாடு**

i. பழங்கால வரலாறு (Ancient India)
ii. இடைக்கால வரலாறு (Medieval India)
iii. தற்கால வரலாறு (Modern India)
iv. இந்திய பண்பாடு (Indian Culture)

**அலகு V - இந்திய அரசியலமைப்பு (Indian Polity)**

**அலகு VI – பொருளாதாரம் (Economy)**

i. இந்தியப் பொருளாதாரம் (Indian Economy)
ii. தமிழ்நாட்டுப் பொருளாதாரம் (Tamil Nadu Economy)

**அலகு – VII இந்திய தேசிய இயக்கம் (Indian National Movement)**

i. 1857 – பெருங்கிளர்ச்சி (1857 Revolt)
ii. இந்திய தேசியகாங்கிரஸ் (Indian National Congress)
iii. தேசிய தலைவர்கள் எழுச்சி (Emergence of National Leaders)
iv. சுதந்திரப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு (Role of Tamil Nadu in Freedom Struggle)

**அலகு VIII – அறிவுக்கூர்மை, காரணமறிதல் மற்றும் கணிப்பொறி அறிவு.**
**(Mental Ability, Reasoning and Computer Awareness)**

i. புள்ளியியல் - (Statistics)
ii. அறிவுக்கூர்மை – சதவீதம், மீ.சி.ம. மீ.பெ.வ. விகிதம் மற்றும் வீதம், தனிவட்டி, கூட்டுவட்டி, நேரம் மற்றும் வேலை, அளவியல்
iii. தர்க்கமுறையில் காரணமறிதல் (Logical reasoning) - கனசதுரம், பகடை சம்பந்தமான கேள்விகள், திசை அறிதல், Coding and decoding) எண்வரிசைகள், எழுத்து மற்றும் எண் சம்பந்தமான கேள்விகள், இரத்த உறவு தொடர்பான கேள்விகள். கொடுக்கப்பட்ட படத்தில் விடுபட்ட எண்ணைக் கண்டறிதல் (Visual Reasoning)

**பொதுத்தமிழில் கேட்கப்படும் 100 வினாக்களுக்கான பாடப்பகுதிகள் பின்வருமாறு:**

- **பகுதி – அ (இலக்கணம்)** - இப்பகுதியில் 20 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்
- **பகுதி – ஆ (இலக்கியம்)** - இப்பகுதியில் 10 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.
- **பகுதி - இ (தமிழ் அறிஞர்களும் தமிழ்த்தொண்டும்)** - இப்பகுதியில் 20 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.

**பொது ஆங்கிலத்தில் கேட்கப்படும் 100 வினாக்களுக்கான பாடப்பகுதிகள் பின்வருமாறு:**

- Part A (Grammar) – இப்பகுதியில் 20 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்
- Part – B (Literature) – இப்பகுதியில் 10 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.
- Part – C (Authors and Their Literary Works) - இப்பகுதியில் 20 தலைப்புகளிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.

(**குறிப்பு:** விரிவான பாடத்திட்டத்திற்கு www.tnpsc.gov.in என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து பார்த்துக் கொள்ளவும்.)

**மேற்கண்ட பாடத்திட்டத்திற்கு தேவையான புத்தகப்பட்டியல் விவரம் பின்வருமாறு:**

**புத்தகப்பட்டியல்**

**I. பொது அறிவு**

1. **6 முதல் 10ம் வகுப்பு வரை உள்ள (சமச்சீர் பாடப்புத்தகங்கள்) அறிவியல்** (Science), **சமூக அறிவியல்** (Social Science), **கணிதம்** போன்ற புத்தகங்கள்.
2. **பொது அறிவு களஞ்சியம்** – Published by விகடன் பிரசுரம் Written by Dr. Sankara Saravanan
3. **விகடன் ஆண்டு மலர் - 2018.**
4. APPOLO STUDY CENTRE - TNPSC Study Material
5. கையளவு களஞ்சியம் (விகடன் பிரசுரம்)
6. மாதம் ஒரு முறை வெளிவரும் G.K Magazines-ல் ஏதாவது ஒன்று மற்றும் **தினசரி வெளிவரும் செய்தித்தாள்கள்** படிக்கவும்.
   For **Current Affairs Material** Visit: www.appolosupport.com, www.appolo.pbworks.com
7. Arihant General Knowledge Book

**II. திறனறித் தேர்வு (Aptitude & Mental Ability)**

1. **Quantitative Aptitude and Reasoning** – R.S. Agarwal
2. **Appolo Study Centre Material – Volume I, II, III & IV**
3. **8, 9, 10th Standard Mathematics** (Samacheer) - புள்ளியியல் பாடம் மட்டும்

**III. பொதுத் தமிழ்**

1. தமிழ் இலக்கணம் (**6 முதல் 12ம் வகுப்பு வரையிலான சமச்சீர் பாடத்திட்டம்)**
2. **தமிழ் பாடம்** - (**6 முதல் 12ம் வகுப்பு வரையிலான சமச்சீர் பாடத்திட்டம்**)
3. **பொதுத்தமிழ் களஞ்சியம்** (டாக்டர். சங்கரசரவணன் - விகடன் பிரசுரம்)

## தேர்வுகளில் கேட்கப்படும் கேள்விகளின் தரம்

தற்பொழுது தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளில் கேட்கப்படும் கேள்விகள் கீழ்க்காணும் மாதிரி வடிவங்களில் கேட்கப்படுகின்றன.

**மாதிரி – I – நேரடி கேள்விகள்**

ஒருநிகழ்வு நடந்த வருடம், அதனோடு தொடர்புடைய பிரபலங்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் தொடர்புடைய துறை, வரலாற்று நிகழ்வுகள், அறிவியல் கண்டுபிடிப்புகள். போன்ற பகுதிகளில் இவ்வகையான வினாக்கள் கேட்கப்படுகின்றன.

**உதாரணமாக**

Liquid helium can reduce the temperature of the coil in MRI equipment to around

A. 40 K **B. 4 K** C. 273 K D. 0°C

திரவ ஹீலியம், காந்த ஒத்திசைவு பிம்பமாக்கல் கருவியின் சுருளின் வெப்பநிலையை ______ வரை குறையச் செய்யும்

A. 40 K B. 4 K C. 273 K D. 0°C

**மாதிரி – II - பின்வரும் கூற்றுகளில் சரியானவை அல்லது தவறானவை எது**

இம்மாதிரி கேள்விகளில் கூற்றுகள் வரிசையாக கொடுக்கப்பட்டு அவற்றில் சரியானவை எது அல்லது தவறான கூற்று எது என கேட்கப்படும். அதை பொருத்து விடையளிக்க வேண்டும்.

**உதாரணமாக**

Identify the correctly matched pairs among the following.

I. Spherometer - measures the curvature of lenses

II. Voltameter - measures electric voltage in a circuit

III. Theodolite - measures horizontal and vertical angles with great accuracy

A. I and II only **B. I and III only**

C. II and III only D. I, II and III

பின்வருவனவற்றுள், சரியாக பொருத்தப்பட்டுள்ள இணைகளை அடையாளம் காட்டுக.

I. ஸ்பெராமானி - வில்லைகளின் வளைவினை அளவிடும்.

II. வோல்டாமானி - மின்சுற்றிலுள்ள மின்னழுத்தத்தை அளவிடும்

III. தியோடலைட்டு - கிடைமட்ட மற்றும் செங்குத்துக் கோணங்களை அதிக துல்லியத்தோடு அளவிடும்

A. I மற்றும் II மட்டும் B. I மற்றும III மட்டும்

C. II மற்றும் III மட்டும் D. I, II மற்றும் III

**மாதிரி – III – பொருத்துக:**

இம்மாதிரியில் இரண்டு பட்டியல்கள் கொடுக்கப்பட்டு அவற்றில் முதல்பட்டியலை இரண்டாவது பட்டியலோடு பொருத்தி பார்த்து, பொருந்தமான விடையை தேர்வு செய்து அதற்கான விடையை குறித்துக் காட்ட வேண்டும்.

**உதாரணமாக**

Match the wind energy plants in List -1 with their state in List – II

| List I | List II |
|---|---|
| A. Muppandal | 1. Gujarat |
| B. Satara | 2. Karnataka |
| C. Jogimati | 3. Tamil Nadu |
| D. Mandvi | 4. Maharashtra |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 1 | 4 |
| **b.** | **3** | **4** | **2** | **1** |
| c. | 4 | 3 | 1 | 2 |
| d. | 3 | 2 | 4 | 1 |

பட்டியல் - I ல் உள்ள காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை பட்டியல் - IIல் உள்ள மாநிலங்களுடன் பொருத்துக:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. முப்பந்தல் | 1. குஜராத் |
| B. சத்தாரா | 2. கர்நாடகம் |
| C. ஜோகிமதி | 3. தமிழ்நாடு |
| D. மாண்ட்வி | 4. மகாராஷ்டிரம் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 1 | 4 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 4 | 3 | 1 | 2 |
| d. | 3 | 2 | 4 | 1 |

**மாதிரி – IV – எவை சரியானவை / எவை சரி அல்லாதவை**

கீழ்க்கண்ட இணைகளில் சரியாக பொருத்தப்பட்டுள்ள அல்லது தவறாக பொருத்தப்பட்டுள்ள இணை எது என்ற வடிவில் இருக்கும். அதனை பொருத்த நாம் விடையளிக்க வேண்டும்.

**உதாரணமாக**

Which of the following are correctly matched?

I. Hero of Vaikom - E.V. Ramasamy

| | | | |
|---|---|---|---|
| II. | Self-Respect Movement | - | T.M. Nair |
| III. | Dravida Kazhagam | - | Salem Conference |
| IV. | South Indian Liberal Federation | - | Justice Party |

a. I and II are correct    b. III and IV are correct

c. I and III are correct    **d. I, III and IV are correct**

கீழ்வருவனவற்றுள் எவை சரியாக பொருந்தியுள்ளது?

| | | | |
|---|---|---|---|
| I. | வைக்கம் வீரர் | - | ஈ.வெ. ராமசாமி |
| II. | சுயமரியாதை இயக்கம் | - | டி.எம். நாயர் |
| III. | திராவிட கழகம் | - | சேலம் மாநாடு |
| IV. | தென்னிந்திய விடுதலை கூட்டமைப்பு | - | நீதிக்கட்சி |

a. I மற்றும் II சரி    b. III மற்றும் IV சரி

c. I மற்றும் III சரி    d. I, III மற்றும் IV சரி

**மாதிரி V - கூற்றும், காரணமும்:**

கூற்று ஒன்று கொடுக்கப்பட்டு அதற்கான காரணமும் கொடுக்கப்பட்டிருக்கும். இம்மாதிரி வடிவ கேள்விகளில் முதலில் கொடுக்கப்பட்டுள்ள கூற்றிற்கான காரணம் பொருத்தமான உள்ளதாக என்பதை உணர்ந்து அதற்கேற்றார் போல் விடையளிக்க வேண்டும்.

இத்தேர்வில் வினாக்கள் உங்களின் நினைவுத்திறன், பகுத்தறியும் திறன், பொது அறிவு, தெளிவான நிலைபோடு போன்றவற்றை சோதனை செய்யும் வகையில் கேட்கப்படுகின்றன.

**உதாரணமாக**

Consider the following statements :

Assertion (A) : Tenth Five Year Plan Period was 2002 -2007

Reason (R) : Priority was given to reduction of poverty and population growth

A. (A) true but (R) is false

B. (A) false but (R) is true

**C. (A) and (R) both are true (R) is correct explanation of (A)**

D. (A) and (R) both are false (R) is not correct explanation of (A)

கீழ்கண்ட கூற்றை கவனி:

துணிபு (A) : பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தின் காலம் 2002 – 2007

காரணம் (R): வறுமை மற்றும் மக்கள் தொகை வளர்ச்சியை குறைத்தலுக்கு முன்னுரிமை

A. (A) சரி ஆனால் (R) என்பது தவறு

B. (A) தவறு ஆனால் (R) என்பது சரி
C. (A) மற்றும் (R) இரண்டும் சரி (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்
D. (A) மற்றும் (R) இரண்டும் தவறு மற்றும் (R) என்பது (A)விற்கு சரியான விளக்கம் அல்ல

**தேர்வில் வெற்றி பெற வழிகள்**

**1. லட்சிய வேட்கை (Ambition)**

இத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று பதவிகளை அடைதல் வேண்டும் என்ற லட்சியம் மனதில் என்றும் இருக்க வேண்டும்.

**2. கால அளவு (Time Limit)**

இத்தேர்விற்குரிய பாடத்திட்டம் (Syllabus) மற்றும் புத்தகப் பட்டியல்களைப் பார்த்து எவ்வளவு நாட்களில் நம்மால் படித்து முடிக்க முடியும் என்று திட்டமிட வேண்டும். அனைத்துப் பாடத்தையும் படித்து முடிக்க கால அட்டவணை (Time Table) தயாரிக்க வேண்டும்.

ஏதேனும் பணியில் உள்ளவர்கள் ஒரு நாளைக்கு 6 முதல் 8 மணி நேரம் தயார் செய்ய வேண்டும். முழுநேரமும் இத்தேர்விற்காக படிப்பவர்கள் என்றால் 10 முதல் 12 மணி நேரம் தயார் செய்ய வேண்டும். இதற்கு ஒரு கால அட்டவணை (Time Table) தயாரிக்க வேண்டும்.

**3. வழிகாட்டுதல்கள் (Guidelines)**

கடைசியாக நடைபெற்ற தேர்வுகளில் வெற்றி பெற்றவர்களிடம் ஆலோசனைகள் பெற வேண்டும். அவர்களுடைய அனுபவம், படிக்கும் முறைகள் போன்றவைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதுபோல சென்ற வருடங்களில் இத்தேர்வை எழுதி தோல்வியடைந்தவர்களையும் சந்தித்து அவர்களது ஆலோசனைகளையும் பெற வேண்டும். அவர்களுடைய அனுபவம், தோல்விக்கான காரணங்கள் போன்றவைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**4. பயிற்சி மையங்களின் பங்கு**

பயிற்சி தேர்வுகள் எழுதி பழகவும், குறிப்பிட்ட கால அளவிற்குள் தேவையான பாடங்களை படிப்பதற்கும் பயிற்சி மையங்கள் உதவும்.

**5. எவ்வாறு படிப்பது? (How to study)**

i. இத்தேர்வில் கேட்கப்படும் கேள்விகள் கொள்குறி வகையாக இருப்பதால் (Objective Type Questions) இக்கேள்விகளை மட்டும் முதலில் படிக்கக் கூடாது.

ii. முதலில் பள்ளி பாடப்புத்தகங்களில் உள்ள விரிவான வகைப்பாடம் படித்து முடித்ததும் பின்னால் கொடுக்கப்பட்டுள்ள 1. கோடிட்ட இடங்களை நிரப்புக, 2.

சரியான விடையைத் தேர்ந்தெடு 3. குறுகிய விடையளி போன்றவைகளுக்கு நாம் விடையை புத்தகத்திலேயே குறிக்க வேண்டும்.

iii. பள்ளிகளில் உள்ள பாடப் புத்தகங்களைப் படித்த பின்னர்தான் பிற புத்தகங்களை படிக்க வேண்டும்.

iv. மேலே தெரிவித்தபடி, பள்ளிப்பாடப் புத்தகங்களைப் படித்து முடித்த பிறகு தேவைப்பட்டால் விருப்பப்பட்ட Market Guide மற்றும் பிற வகைகளில் நமக்கு கிடைக்கும் கொள்குறி வினா வங்கிகளை வாங்கி அதிலுள்ள வினாக்களுக்கு விடையளித்து பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

## 6. எவ்வாறு குறிப்புகள் தயார் செய்வது? (How to prepare notes)?

ஒவ்வொரு புத்தகத்தையும் படிக்கும் போது முக்கியமான குறிப்புகளை தனியாக நீள நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைக்க வேண்டும்.
(உ.ம்) வரலாறு, புவியியல், அறிவியல் என்று தனித்தனியாக நோட்டுப்புத்தகத்தில் குறிப்புகள் எடுக்க வேண்டும். அவ்வாறு குறிப்புகள் எடுக்கும் போது Margin அதிகமாக விட வேண்டும். ஏனென்றால், இது தொடர்பாக கூடுதல் விஷயங்கள் வேறு ஒரு புத்தகத்திலிருந்து கிடைக்கும் போது அதை இதில் பின்னர் சேர்த்துவிட (Addition) ஏதுவாக இருக்கும்.

## 7. கலந்துரையாடல் (Discussion)

வாரத்தில் இரு முறை) 3 முதல் 5 நண்பர்கள் ஒன்று சேர்ந்து குழுவாக அமர்ந்து பொது அறிவுப் பாடங்களை கலந்துரையாடல் செய்ய வேண்டும்.

இவ்வாறு கலந்துரையாடல் செய்வது நமக்குள் இருக்கும் பாட சந்தேகங்களை தெளிவாக்கும் மற்றும் நேர்முகத் தேர்வை எதிர்கொள்கின்ற அச்சத்தையும் நீக்கும்.

## 8. மாதிரித் தேர்வு எழுதுதல் (Writing of Model Examinations)

நண்பர்கள் குழுவாக சேர்ந்து TNPSC பழைய வினாத்தாள்களில் கொடுக்கப்பட்ட வினாத்தாள்களை சேகரித்து மாதிரித் தேர்வு எழுதி தங்களுக்குள்ளேயே தேர்வு விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய வேண்டும்.

மேற்கண்ட பாடத் தொகுப்பினை சரியான வழிமுறையோடு படித்து, தேர்வில் வெற்றி பெற உதவும் வழிமுறைகளை பின்பற்றினால் போட்டித் தேர்வுகளை நம்பிக்கையுடன் எதிர் கொண்டு எளிதாக வெற்றி பெற இயலும்.

தன்னம்பிக்கையும், சரியான முயற்சியும், முறையான பயிற்சியும் இருந்தால் வெற்றி நிச்சயம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எனவே எதிர்வரும் நாட்களில் இத்தேர்விற்கான பாடத்தொகுப்பின் அடிப்படையில், உங்களுக்கு தேர்விற்கு பயன்படும் வகையிலும் ஒவ்வொரு பாடத்திலிருந்தும் மாதிரி வினாக்கள் இந்நாளிதழில் வரவுள்ளன. அதனை

தொடர்ந்து வாங்கி படித்து பயிற்சி மேற்கொண்டு போட்டித் தேர்வில் வெற்றி பெற்று நேர்மையான அலுவலராக வலம் வர வாழ்த்துக்கிறேன்.

**“கண்டதை படித்தால் பண்டிதன் ஆகலாம்**
**தேர்விற்கு தேவையானவற்றை படித்தால்**
**அரசு ஊழியர் ஆகலாம்”.**

என்பதை உணர்ந்து இனிவரும் மூன்று மாதங்களை பயன்படுத்தி கண்டதை படிக்காமல் தேர்வுக்கு தேவையானவற்றை மட்டும் படித்து அரசு ஊழியராகி மக்கள் பணியாற்ற வாழ்த்துக்கள்.

**இரா. சாம். இராஜேஷ்வரன்**
**இயக்குநர், அப்போலோ பயிற்சி மையம்**
**சென்னை.**